Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 40/2026** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **தியாகராஜன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

02.06.2026

முதல் விசாரணை:

1. நான் தற்போது அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 19.07.2025ம் தேதி காலை 09.30 மணியளவில் எஸ்.பி.கே. பெண்கள் மேல்நிலை பள்ளி சாலையில் நான் நடந்து சென்று கொண்டிருந்த போது ஒரு இருச்சக்கர வாகனமானது என்மீது இடித்ததில் நான் கீழே விழுந்துவிட்டேன். விபத்தில் எனக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. என்மீது யார் மோதினார்கள் என்று தெரியவில்லை. ஆஜர் எதிரிக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. நாங்கள் சமாதானம் ஆகிவிட்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நான் எஸ்.பி.கே. பெண்கள் மேல்நிலைப்பள்ளி சாலையில் நடந்து சென்ற போது எனக்கு பின்னால் இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து என் மீது மோதியதில் கீழே விழுந்த எனக்கு வலது கால் தொடைப்பகுதியில் வீக்க காயம்

ஏற்பட்டதை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 40/2026** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **தங்ககுமார்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

02.06.2026

முதல் விசாரணை:

1. நான் தற்போது அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 19.07.2025 ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் எனது தந்தை தியாகராஜன் எஸ்.பி.கே. பெண்கள் மேல்நிலை பள்ளி சாலையில் சென்று கொண்டிருந்த போது ஒரு இருசக்கர வாகனம் மோதி எனது தந்தைக்கு விபத்து ஏற்பட்டதாக எனது தந்தை எனக்கு தகவல் தெரிவித்தார். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது எனது தந்தைக்கு கை மற்றும் கால்களில் பலத்த காயங்கள் இருந்தது. உடனே எனது தந்தையை நான் எனது காரில் அழைத்து கொண்டு அருப்புக்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்றேன். அதன் பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரையில் உள்ள வேலம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். விபத்து நடந்த இரண்டு நாட்கள் கழித்து நடந்த சம்பவம் தொடர்பாக அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அருகில் இருந்தவர்கள் விபத்து பற்றி என்னிடம் கூறியதன் அடிப்படையில் புகார் மனுவை நான் கொடுத்தேன். தற்போது எங்களுக்கும், எதிரிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. நாங்கள் சமாதானம் ஆகிவிட்டோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சொன்ன முறையில் சொன்ன நாள் தேதி நேரத்தில் புகார் மனுவானது கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.